இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 13.11.2026

போலீசுக்கே பாதுகாப்பு இல்லை!

விஜய் ஆட்சியில் பொதுமக்கள் தான் அச்சத்தில் வாழ்கிறார்கள் என்றால் பொதுமக்களைக் காக்க வேண்டிய போலீஸாரும் அச்சத்தில் வாழ்கிறார்கள். போலீஸாரையே கொலை செய்வதும், அவர்களையே அடிப்பதும் நாட்டில் அதிகமாகி இருக்கிறது.

தீபாவளி அன்று 15க்கும் மேற்பட்ட கொலைகள் தமிழ்நாட்டில் நடந்துள்ளது. அதில் அச்சம் தருவது தேனியில் நடந்த படுகொலை ஆகும். தேனி மாவட்டம் பழனி செட்டிபட்டி காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக இருப்பவர் செந்தில்குமார். இவர், மாற்றுப் பணியாக தேனி டி.எஸ்.பி. அலுவலகத்தில் பணி முடித்துவிட்டு வீடு திரும்பிக் கொண்டு இருந்தார்.

சமதர்மபுரம் முக்கிய சாலையில் மது போதையில் பட்டாசு வெடித்து, அதை ரீல்ஸ் ஆக எடுத்துக் கொண்டிருந்தார்கள் சிலர். பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் அவர்கள் செயல்பட்டதால், அந்த இளைஞர்களுக்கு அறிவுரை சொல்லி இருக்கிறார் செந்தில்குமார். அவர்கள் இவர் பேச்சைக் கேட்கவில்லை. காவல்துறை கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் அனுப்பிவிட்டு, அங்கு நடப்பதை இவர் போனில் பதிவு செய்து கொண்டு இருந்தார். இதைப் பார்த்து ஆத்திரமடைந்த மதுபோதை ஆட்கள் இவரை அடிக்கத் தொடங்கினார்கள். சரமாரியாகத் தாக்கினார்கள். அருகில் இருந்த பொதுமக்கள் இதைப் பார்த்து செந்தில் குமாரை அவர்களிடம் இருந்து மீட்டு மருத்துவமனையில் சேர்த்துள்ளார்கள். சில நிமிடங்களில் செந்தில்குமார் இறந்து போனார்.

செந்தில்குமார் அப்போது பணியில் இல்லை என்று காவல்துறையின் அறிக்கை சொல்கிறது. பணியில் இருந்தார் என்று காவல் துறையைக் கையில் வைத்திருக்கும் முதலமைச்சர் விஜய் அறிக்கை சொல்கிறது. நீர்வாகம் எவ்வளவு தள்ளாடுகிறது என்று இதன் மூலம் தெரியவில்லையா?

தேனியில் போலீஸ்காரர் செந்தில்குமார் கொல்லப்பட்ட அன்று சென்னையிலும் அதேபோல ஒரு தாக்குதல் நடந்துள்ளது. பரங்கிமலையில் இரவு ரோந்துப் பணியில் இருந்தார்கள் காவலர்கள். போதையில் வந்த 3 பேரை போலீஸார் நிறுத்தி இருக்கிறார்கள். அப்போது காவலர் ராஜாவை போதை ஆசாமிகள் கடுமையாக தாக்கி இருக்கிறார்கள்.

கடலூர் மாவட்டம் நெல்லிக்குப்பத்திலும் இதே போல் போலீஸார் தாக்கப் பட்டுள்ளனர். காவலரின் சட்டையைப் பிடித்து அடிக்க வந்த வீடியோக்கள் இணைய தளத்தில் பரவி வருகிறது.

கடந்த 10 ஆம் தேதியன்று சேலத்தில் என்ன நடந்திருக்கிறது என்றால்.. தலைமைக் காவலரை கத்தியால் குத்த முயன்றுள்ளார் ஒருவர். ஓமலூர் அருகே தாதியம்பட்டி டாஸ்மாக் கடையில் கூட்டத்தை ஒழுங்குபடுத்த முயன்றுள்ளார் தலைமைக் காவலர் சங்கர். ஆத்திரமடைந்த பிரபாகரன் என்பவர், கத்தியை எடுத்து தலைமைக் காவலரை மிரட்டி குத்த வந்துள்ளார். அருகில் இருந்தவர்கள் பிரபாகரனை பிடித்து தலைமைக் காவலரை காப்பாற்றி இருக்கிறார்கள்.

போதைக் கலாச்சாரம், விஜய் ஆட்சியில் போலீஸையே போட்டுத் தள்ளும் அளவுக்கு முத்திக் கொண்டு வருவதைத் தான் இது காட்டுகிறது. இவை ஏதோ தீபாவளியில் இருந்துதான் தொடங்கி இருக்கிறது என நினைக்க வேண்டாம். விஜய் ஆட்சிக்கு வந்தது முதல் கிரிமினல்களின் அட்டூழியம் அதிகம் ஆகி வருகிறது. இதனால் பொதுமக்களைக் காக்க வேண்டிய காவல் துறையே பாதிக்கப்பட்டு வருகிறது.

- **ஆகஸ்ட் 31 ஆம் தேதியன்று குடியாத்தம் தலைமைக் காவலர் தாமரைச் செல்வி கத்தியால் குத்தப்பட்டு கொலை செய்யப்பட்டார்.**
- **செப்டம்பர் 19 தேதி சென்னை நுங்கம்பாக்கம் லேக் ஏரியா பகுதியில் வசித்து வந்த 58 வயதான ஆயுதப்படை உதவி ஆய்வாளர் ராஜ் தனது வீட்டில் தீயில் கருகிய நிலையில் இறந்து கிடந்தார். அவரது மனைவியும், தேவா என்பவரும் சேர்ந்து பெட்ரோல் ஊற்றி கொன்றது பின்னர் தெரிய வந்தது.**
- **செப்டம்பர் 28 ஆம் தேதி ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி அரசு மருத்துவமனையில் மோதலைத் தடுக்க முயன்றபோது பெண் தலைமைக் காவலர் கண்ணகி தாக்கப்பட்டு உயிரிழந்தார்.**
- **அக்டோபர் 31 ஆம் தேதி அரியலூரில் ஊர்க்காவல்படை வீரர் வெங்கடேசன் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தார். பொதுமடத்தில் மது அருந்திவிட்டு தகராறு செய்தவர்களைத் தட்டிக்கேட்டபோது காவலரை சிலர் தாக்கினர். அதில் அவர் உயிரிழந்தார். இதன் தொடர்ச்சி தான் தேனியில் செந்தில்குமார் கொலை செய்யப்பட்டு இருப்பது.**

பெண்களைக் காக்க சிங்கப் பெண் படை அமைத்த விஜய் ஆட்சியில் பெண் காவலர்கள் நிம்மதியாக இருக்கிறார்களா?

சிவகங்கை ஆயுதப்படை பிரிவில் பணியாற்றும் பெண் காவலர் கூட்டுப் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளான சம்பவம் கடந்த ஜூன் மாதம் நடந்தது. 3 பேர் கைது செய்யப்பட்டார்கள். தூத்துக்குடி மாவட்டம் குலசேகரப் பட்டினத்தில் காவல் நிலையத்தில் பணியாற்றி வந்த பெண் பணியாளருக்கு, வாட்ஸ்அப் மூலம் பாலியல் தொல்லை கொடுத்தார் காவல் ஆய்வாளர். திருநெல்வேலியில் பெண் தலைமைக் காவலருக்குப் பாலியல் தொல்லை கொடுத்த விவகாரத்தில், சிறப்பு உதவி ஆய்வாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கோவையில் ஆய்வாளர் சுவர்ணவள்ளி, கும்பகோணத்தில் தலைமைக் காவலர் கவிதா, கண்ணமங்கலத்தில் எஸ்.ஐ.கவிதா ஆகியோர் மீது தாக்குதல் நடந்துள்ளது. சிங்கப் பெண்களே பீதியிலும் பயத்திலும் இருக்கிறார்கள் விஜய் ஆட்சியில்.

விஜய் ஆட்சிக்கு வந்த பிறகு இதுவரை 4 காவலர்கள் கொலை செய்யப்பட்டுள்ளார்கள். ஒரு ஊர்க்காவல் படை வீரர் கொலை செய்யப்பட்டுள்ளார். 5 பெண் காவலர்கள் தாக்கப்பட்டுள்ளார்கள். 3 பெண் காவலர்கள் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள். இதுதான் விஜய் ஆட்சி. அவர் கட்டுப்பாட்டில் தான் காவல் துறை இருக்கிறது.

பொதுமக்களை அல்ல, காவல் துறையையே காக்க துப்பு இல்லாதவர் தான் இன்றைய முதலமைச்சர் விஜய்.

ஐந்து மாதம் கழித்து நேற்று சட்டம் ஒழுங்கை ஆய்வு செய்தாராம் முதலமைச்சர். அவர் தினந்தோறும் ஆய்வு நடத்தினாலும் இப்படித்தான் இருக்கப் போகிறது தமிழ்நாடு.

தமிழக 'வெற்றி'ப் பயணத்தால்

தினசரி ரூ.20 கோடி நஷ்டம்! சீரழியும் அரசு போக்குவரத்துத் துறை!

தொழிலாளர்கள் அச்சம்!

சென்னை, நவ. 13-

தமிழக வெற்றிப் பயணத்தால் அரசு போக்குவரத்து கழகங்கள் நஷ்டத்தை சந்திக்க துவங்கி யுள்ளன. இது போக்குவரத்துத் தொழிலாளர்களிடம் பயத்தையும், கவலை யையும் அதிகரித்துள்ளது.

தமிழ்நாட்டில் விழுப்புரம், கும்ப கோணம், மதுரை, கோவை, சேலம், திருநெல்வேலி என மொத் தம் 6 போக்குவரத்து மண்டலங் கள், மாநில விரைவு போக்குவரத்து கழகம், சென்னை மாநகர போக்கு வரத்து கழகம் என 8 பிரிவுகள் உள் ளன. தினசரி 19,283 பேருந்துகள் இயக்கப்படுகின்றன. அதில் சராசரி யாக 1 கோடி பயணிகள் பயணம் செய்துவருகின்றனர். இதன்மூலம் சுமார் 50 கோடி ரூபாய் வருவாய் வந்துகொண்டிருந்தது.

கடந்த தி.மு.க. ஆட்சிக்காலத்தில் விடியல் பயணம் என்கிற பெயரில் மாநகர, நகர மற்றும் கிராமப்புற பேருந்துகள் என 7714 பேருந்துக ளில் மட்டும் கட்டணமில்லாமல் பெண்கள் பயணம் செய்தனர். த.வெ.க. ஆட்சி அமைந்த பின்னர் 'வெற்றிப் பயணம்' திட்டத்தில், தொலைதூர, சொகுசு, ஏசி பேருந்து கள் தவிர மீதியுள்ள 12,695 பேருந்துகளில் பெண்களுக்கு இல வச பயணம் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது.

பெண்களுக்கான இலவச பய ணத்தை நடைமுறைப்படுத்தும் முன்பு மாணவர்களுக்கு, மாற்றுத் திறனாளிகளுக்கு, மூத்த குடிமக் களுக்கான இலவச பயணத் திட்டம் மட்டும் நடைமுறையில் இருந்தன. அப்போது போக்குவரத்து கழகத் தின் தினசரி வருவாய் 45 முதல் 47 கோடி வரை இருந்தன. பெண்க ளுக்கான இல வசப் பயணம் நடை முறைப்படுத்திய போது போக்குவ ரத்து கழகங்கள் பெரும் நட்டத்தை சந்தித்தன. அதனால் நட்டத்தை ஈடுகட்டும் வகையில் அரசின் சார் பில் தினசரி மானியமாக 25 கோடி ரூபாய் போக்கு வரத்து கழகத்துக்கு தரப்பட்டது. இருந்தும் தினசரி 10 கோடி வரை நட்டத்தை சந்தித் துள்ளன.

த.வெ.க. ஆட்சியில் வெற்றிப் பய ணம் நடைமுறைப்படுத்திய பின் னர் தினசரி வருவாய் அதிகபட்சம் 9 கோடி வரை வருகிறதாம். பெரும்பா லும் 7 கோடியை தாண்டுவதில்லை யாம். இதனால் தினசரி நட்டம் 40 கோடி யாகிவிட்டது. த.வெ.க. அரசு சார்பில் போக்குவரத்து கழகங்க ளுக்கு தி.மு.க. ஆட்சியில் தரப்பட்ட அதே 25 கோடி தான் மானியமாக தரப்படுகிறதாம். இதனால் தினசரி 20 கோடி வரை நட்டத்தில் போக்கு வரத்துக் கழகங்கள் பேருந்துகளை இயக்கிவருகின்றன.

பேருந்துகள் குறைப்பு!

அரசு போக்குவரத்துக் கழகம் தினசரி இயங்க சுமார் 19 கோடி ரூபாய் செலவாகிறது. அதில் டீசல் மட்டும் 16.17 கோடிக்கு வாங்கப்படு கிறது. பேருந்துகள் பராமரிப்புக்காக 2.35 கோடி செலவிடப்படுகிறது. இப்போது தினசரி செலவுகளுக்கு கூட டிக்கெட் வழியாக வருமானம் வரவில்லை என்கிறார்கள். இதனா லேயே மண்டலங்கள் அளவில் வருவாய் இல்லாத வழித்தடங்க ளில் வாரத்தில் 3 நாட்கள், 4 நாட்கள் பேருந்துகள் இயக்குவது நிறுத்தப்பட்டன. விழுப்புரம் கோட் டத்தில் மாவட்ட அளவில் தி.மலை யில் 34, கடலூரில் 28, விழுப்புரம், கள்ளக்குறிச்சியில் 26 பேருந்துகள், வேலூர் 23, காஞ்சிபுரம் 15, திரு வள்ளூர் 10 பேருந்துகள் என 136 பேருந்துகள் செவ்வாய், புதன், வியாழன் ஆகிய நாட்களில் இயக் குவது நிறுத்தப்பட்டது.

கடும் விமர்சனத்துக்கு பின்னர் மீண்டும் அந்த பேருந்துகள் இயக் கப்படுகின்றன என்கிறார்கள் விழுப் புரம் மண்டல அதிகாரிகள். அதே நேரத்தில் சத்தமில்லாமல் பேருந்து கள் குறைக்கப்பட்டதோடு, குறுகிய தூர பேருந்துகள் தொலைதூர பேருந்துகளாக மாற்றப் பட்டுள்ளன என்கிறார்கள்.

மானியத்தொகை வழங்கப்படவில்லை!

இதுகுறித்து தொழிலாளர் முன் னேற்ற சங்கத்தின் மாநில துணைத் தலைவர்களில் ஒருவரான சௌந் தர்ராஜனிடம் கேட்டபோது, "போக்கு வரத்துக் கழகத்தில் சுமார் 1 லட்சம் பணியாளர்கள் பணியாற்றுகிறார் கள். தி.மு.க. ஆட்சியில் விடியல் பயண திட்டம் அறிமுகப்படுத்தும் போதே தோராய கணக்கீட்டு ஆண்டுக்கு 1200 கோடி நிதியை எங்களுக்கு தந்தது அரசு. அதன் பின் 3 மாதத்துக்கு ஒருமுறை நிதி தந்துவந்தது. அந்தநிதியை வைத்து அப்போது புதிய பேருந்துகள் வாங் கப்பட்டது. இப்போது த.வெ.க. ஆட்சி யில் வெற்றிப் பயணம் திட்டத் துக்கு, இதுவரை 3 மாதத்துக்கு ஒரு முறை தரவேண்டிய மானியத் தொகையைக்கூட அரசு வழங்க வில்லை.

தொழிலாளர்கள் புலம்பல்!

பெரும்பாலும் ஒப்பந்த பணியா ளர்களை வைத்து போக்குவரத்துக் கழகம் இயங்கிவருகிறது. டெக்னிக் கல் ஊழியர்கள் கிடையாது. டீசல் தரும் நிறுவனங்களுக்கு பணம் தரவில்லை. பேருந்துகளுக்கு டயர் வாங்கிப்போட பணமில்லை என்ப தால் ரீட்ரேடிங் டயர் போட்டு பேருந்தை ஓட்டச்சொல் கிறார்கள். ரீட்ரேடிங் டயர்களை பயன்படுத்தி னால் பெரும் விபத்துகள் ஏற்படும் எனச் சொன்னாலும் கேட்பதில்லை. தொழிலாளர் சங்கங்களிடம், தொழிலாளர்கள் பிரச்சினைகள், குறித்து எதுவும் கலந்து ஆலோ சனை செய்வதில்லை. அமைச்சர் விஜய் தமிழன்பார்த்திபன் ஆய்வு செய்யவில்லை. எங்கள் பிரச் சினையை யாரிடம் போய் சொல்வது எனத்தெரியாமல் இருக் கிறோம்" என்றார்.

பெண் மாவட்ட ஆட்சியருக்கு ஆபாச குறுஞ்செய்தி!

த.வெ.க. அருள் விக்னேஷ் எம்.எல்.ஏ.வை கைது செய்ய தயக்கம் ஏன் CM Sir?

சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு கேள்வி!

நெல்லை, நவ.13- சிகிச்சையில் இருந்தவரை சட்டப்பேரவை முன் னாள் தலைவர் மு.அப் பாவு தனது வலைதளத் தில் கூறி யிருப்பதாவது.

குடிநீர் பிரச்சினை குறித்துப் புகார் மனு கொடுக்க வந்த சமூக ஆர் வலர் கார்த்திக் என்பவரை சட்டப்பேரவைத் துணைத் தலைவர் ரவிசங் கர் மது போதையில் தகாத வார்த்தைகளால் பேசி கொலை வெறி தாக்கு தலில் நடத்தியதால் படுகா யம் அடைந்து சமயபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தவரை அப்பகுதி காவல் ஆய்வா ளர் கிருபாநிதி மருத்துவம னையிலிருந்து இழுத்து வந்து துணை சபாநாயகர் முன் நிறுத்தி மிரட்டி துணை சபாநாயகர் தன்னை அடிக்கவில்லை என்று பேட்டி கொடுக்க வைத்தது வன்மையாக கண்டிக்கதக்கது! "இருவர் மீதும் நள்ளிரவுஆட்சி "நட வடிக்கை எடுக்குமா CM sir ?

கள்ளக்குறிச்சி மாவட்ட கலெக்டர் பத்மஜாவின் வீட்டிற்கு குடிபோதையில் சென்று அலம்பல் செய்து



அவருக்கு ஆபாச செய்தி அனுப்பிய உங்கள் கட்சி எம்.எல்.ஏ., அருள்விக் னேஷ் மீது தலைமைச் செயலாளரிடம் புகார் கொடுத்த பின்பும் நட வடிக்கை எடுக்காமல் 'ரீ வைகுண்டம்

MLA சரவணன் பாலி யல் வழக்கை சமரசம் செய்தது போல் மாவட்ட ஆட்சியர் கொடுத்த பாலி யல் சீண்டல் வழக்கையும் சமரசம் செய்ய முயற்சிக்கி றீர்களா CM Sir?.

காவேரி நீர் திறக்காத இந்த அரசை கண்டித்து டெல்டா பகுதி விவசாயி கள் தஞ்சையில் கூட்டி யி ருந்த பிரம்மாண்ட விவசா யிகள் கூட்டத்தில் எதிர்க் கட்சித் தலைவர் கலந்து கொண்டு பேசிய போது கூட்டத்தில் இருந்த ஒரு வர் "திரிஷா " என்ற பெயரை உச்சரித்ததற்காக எதிர்க்கட்சித் தலைவர் சின்ன கலைஞரை அதி காலை ஆயிரம் போலீசாரு டன் சென்று கைது செய்த நீங்கள் மாவட்ட ஆட்சி யர் மீது பாலியல் சீண்டல் செய்த அருள் விக்னேஷ் MLAவை கைது செய்ய ஏன் தயங்குகிறீர்கள் CM sir ?

இவ்வாறு அவர் தனது வலைதளத்தில் கூறியுள் ளார்.

முன்னாள் புதுக்கோட்டை மாவட்டச் செயலாளர்

பெரியண்ணன் 30ஆம் ஆண்டு நினைவேந்தல் - கழகத்தினர் திரளாகப் பங்கேற்பீர்!

மாவட்டச் செயலாளர்கள் எஸ்.ரகுபதி - கே.கே.செல்லப்பாண்டியன் வேண்டுகோள்!

புதுக்கோட்டை, நவ.13- புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான எஸ். ரகுபதி, வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டி யன் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

புதுக்கோட்டை முன் னாள் மாவட்ட செயலாள ரும், அரசு தலைமை கொற டாவுமான பெரியண்ணன் அவர்களின் 30ம் ஆண்டு





நினைவு நாள் 15.11.2026 ஞாயிற்றுக்கிழமை காலை மேலக்கோட்டையில் உள்ள பெரியண்ணன் அவர்களின் சமாதிக்கு மாலை அணிவித்து மரி யாதை செலுத்தப்படுகிறது. இதனைத் தொடர்ந்து காலை 10 மணி அளவில் இரத்த தான முகாம் நடை பெறுகிறது.

நிகழ்வுகளில் புதுக் கோட்டை வடக்கு, தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட கழக நிர் வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, கிளைக் கழக செயலாளர்கள் மற் றும் நிர்வாகிகள், அணி களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், முன்னாள், இந்நாள் உள் ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், செயல் வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கக் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு புதுக் கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர், முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி, வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டி யன் ஆகியோர் தமது அறிக்கையில் தெரிவித் துள்ளனர்.

போலீஸாருக்கே பாதுகாப்பு தேவைப்படும்போது, பொதுமக்களை யார் பாதுகாப்பது?

தி.மு.க. ஐ.டி. விங் கேள்வி?

சென்னை, நவ. 13-

த.வெ.க. ஆட்சியில் சட்டம் ஒழுங்கை பாதுகாக்க வேண்டிய காவல்துறையினருக்கே பாதுகாப்பு தேவைப்படும்போது, பொதுமக்களை யார் பாதுகாப்பது? என்று திமுக ஐ.டி., விங் வினவியுள்ளது. இந்நிலையில், ஆட்சிக்கு வருவதற்கு முன்பு ஸ்டாண்ட்அப் காமெடியன் ராஜ் மோகன் பேசிய பழைய வீடியோவை பகிர்ந்து திமுக ஐ.டி.விங் விமர்சித் துள்ளது.

இதுகுறித்து தி.மு.க. ஐ.டி.விங் செய்தி வருமாறு:-

த.வெ.க. ஆட்சியில் சட்டம் ஒழுங்கை பாதுகாக்க வேண்டிய காவல்துறையினருக்கே பாதுகாப்பு தேவைப்படும்போது, பொதுமக்களை யார் பாதுகாப்பது? திமுக ஐ.டி., விங் மக்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண் டிய போலீஸாருக்கே தவெக ஆட்சியில் பாதுகாப்பு இல்லாமல், அவர்கள் மீது தாக்குதல் நடத்தும் சம்பவங்கள் அதி கரிப்பு ஆட்சிக்கு வருவதற்கு முன்பு ஸ்டாண்ட்அப் காமெடியன் ராஜ்மோகன் பேசிய பழைய வீடியோவை பகிர்ந்து திமுக ஐ.டி.விங் விமர்சனம் தமிழகத் தில் கொலை, கொள்ளை, தாக்குதல் என சட்டம் ஒழுங்கு சந்தி சிரிக்கும் நிலையில், அமைச்சர் ராஜ்மோகன் பேசும் பழைய வீடியோ

